

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாம் முன்னேற்பாடு பணிகள் குறித்து, ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (19.01.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 50/2017 நாள்: 19.01.2017

**பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி கட்டாயமாக போட வேண்டும்.**

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், வேண்டுகோள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாம் முன்னேற்பாடு பணிகள் குறித்து, ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (19.01.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

இந்திய அரசு 06.02.2017 முதல் 28.02.2017 வரை 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள், மாணவர்கள் மற்றும் மாணவிகள் அனைவருக்கும் மீசல்ஸ் - ருபெல்லா (Measles Rubella) தடுப்பூசி போடப்பட உள்ளது. முதற்கட்டமாக இது தமிழ்நாடு, கர்நாடகம், புதுச்சேரி, லட்சத்தீவுகள் மற்றும் கோவாவில் நடத்தப்பட உள்ளது. மீசல்ஸ் - ருபெல்லாவால் ஏற்படும் நோய் மற்றும் இறப்பு விகிதத்தை குறைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இதற்கு முன் இவ்வகை ஊசி போடப்பட்டிருந்தாலும், தடுப்பூசி முகாம் நடைபெறும் நாட்களில் MR தடுப்பூசி போடப்பட வேண்டும்.

அனைத்து அரசு, தனியார், உறைவிடப் பள்ளிகளில் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு 6 அங்கன்வாடி மையங்களிலும், தடுப்பூசி போடப்படும், ஒவ்வொரு பள்ளிகளில் உள்ள ஒருங்கிணைப்பு ஆசிரியர் மூலம் இப்பணி சுமூகமாக செயல்படுத்தப்படும்.

தற்போது உள்ள தடுப்பூசி அட்டவணையின்படி மீசல்ஸ் முதல் தவணை 9 மாதம் முடிந்த குழந்தைகளுக்கும், மீசல்ஸ் இரண்டாம் தவணை 16 - 24 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கும் போடப்படுகிறது. அது மார்ச் மாதம் முதல் மாற்றப்பட உள்ளது. அதாவது மீசல்ஸ் - ருபெல்லா இணைந்த ஒரே தடுப்பூசியாக மாற்றப்படும்.

தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாம் நான்கு வாரங்களாக பிரித்து நடைபெற உள்ளது. முதல் வாரம் அனைத்து பள்ளிகளிலும், இரண்டாம் மற்றும் மூன்றாம் வாரம் பள்ளி செல்லா குழந்தைகளுக்கும், நான்காம் வாரம் தடுப்பூசி போடாமல் விடுபட்ட குழந்தைகளுக்கும் போடப்படும்.

இவ்வகை ஊசி 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு முறை உபயோகிக்கப்படும் ஊசியினைக் கொண்டு 0.5 ml அளவு வலது கையில் உள்ள தோலுக்கு அடியில், நன்கு பயிற்சி பெற்ற கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் போடப்படும்.

MR தடுப்பூசி முகாமிற்காக அனைத்து மருத்துவர்கள் மற்றும் பாரா மெடிக்கல் பணியாளர்கள் அனைவருக்கும் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் அனைத்தும் பாதுகாப்பான முறையில் (Cold Chain) தடுப்பூசி முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்படும். MR தடுப்பூசி முகாம் போலியோ முகாமைபோல வீடு வீடாக சென்று போடப்பட மாட்டாது.

நமது மாவட்டத்தில் மொத்தம் 1,224 பள்ளிகள், 1,401 சத்துணவு மையங்களில் MR தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. மேலும் இம்முகாம்கள் மூலம் 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள 4,44,556 பள்ளி செல்லக்கூடிய மற்றும் பள்ளி செல்லாத குழந்தைகள் பயன் அடைவார்கள்.

எனவே MR தடுப்பூசி முகாமில் பெற்றோர்கள் தங்களது 9 மாதம் முதல் 15 வயது வரை உடைய குழந்தைகளுக்கு மறவாமல் தடுப்பூசி போட்டு, நோயற்ற வாழ்வை உருவாக்கிட மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. இரவீந்திரன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. எம். மதுசூதனன், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு. வசந்தி, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. கே.பேச்சியம்மாள் மற்றும் நகராட்சி அலுவலர்கள், மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.